PREVIOUS YEAR MEDIA REPORTS

■ மதுரை வேலம்மாள் மருத்துவமனை அருகில் உள்ள ஐடா ஸ்கட்டர் அரங்கில் யுனைடெட் டிரேட் பேர்ஸ் விவசாய கண்காட்சியை வேலம்மாள் கல்வி குழு தலைவர் முத்துராமலிங்கம் திறந்து வைத்தார். இடமிருந்து இயக்குனர் கார்த்திக், டிரேட் பேர்ஸ் நிர்வாக இயக்குனர் பாக்கியராஜ், தமிழக அளவைத்து விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பு குழு மாநிலத் தலைவர் பாண்டியன், விவசாயிகள் ராமச், மணி, அருண்.

டிச.20 வரை மதுரையில் விவசாய கண்காட்சி

நவீன இயந்திரங்கள் அணிவகுப்பு

மதுரை, டி.19 – யுனைடெட் டிரேட் பேர்ஸ் நிறுவனம் சார்பில் மதுரை வேலம்மாள் மருத்துவமனை அருகில் ஐடா ஸ்கட்டர் ஹாலில் டிரேட் செண்டர் 13வது தேசிய மற்றும் தொட்டக்கலை தொழில் நுட்பம் சார்ந்த கண்காட்சி நேற்றுடிச.17) தொடங்கியது.

வேலம்மாள் கல்வி குழுமத்தலைவர் முத்து ராமலிங்கம் தமிழக வைத்தார். விவசாயிகள் அளைத்து ஒருங்கிணைப்பு குழு சங்க மாநிலத் தலைவர் பாண்டியன், தி.மு.க., அமைப்பு சாரா தொழிலாளர் முன்னேற்ற சங்க செயலாளர் வேல்முருகன் தலைமை வகித்தனர்.

தமிழ் இணை இயக்குனர் விவேகானந்தன் முன்னிலை வகித்தார்.

கண்காட்சி குறித்து நிறுவன நிர்வாக இயக்குனர் பாக்கியராஜ் கூறியதாவது: தேசிய அளவில் 120 நிறுவனங்களின் ஸ்டால்கள் கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன. உழவு முதல் அறுவடை வரையான புல்டோசர், டிராக்டர், ரோட்டோ வேட்டர் இயந்திரங்கள், சோலார் நிறுவனங்களின் புதியதயாரிப்புகள், பம்ப் நிறுவனங்களின் தயாரிப்புகள், வேலி அமைக்கும் இயந்திரங்கள் ஸ்டால்களில் உள்ளன.

தண்ணீர் பாய்ச்சும் குழாய்களின் வால்வுகளை அலைபேசி மூலம் இயக்கும் வசதி, நீர் பாய்ச்சும் வசதி புதிய தொழில் நுட்பமாக இடம் பெற்றுள்ளது.

இந்தாண்டு புதுமையாக தேனியின் தாயகம் கூட்டுப்பண்ணை, மேகமலை கூட்டுப்பண்ணை, சோத்துப்பாறை உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் விளைபொருட்கள், இயற்கை விவாயிகளின் ரசாயனமில்லா விளைபொருட்களுக்கான பத்து தனி ஸ்டால்கள் உள்ளன.

சில குறிப்பிட்ட நிறுவனங்களின் இயந்திரங்களுக்கு கண்காட்சியில் 30 – 40 சதவீத தள்ளுபடி உண்டு என்றார்.

டி.20 வரை நிமும் காலை 10:00 முதல் மாலை 6:00 மணி வரை இக்கண்காட்சி நடக்கிறது. அனுமதி இலவசம்.

நடவு முதல் அறுவடை வரை நவீன தொழில்நுட்ப எந்திரங்கள்:

விவசாய கண்காட்சி இன்றும், நாளையும் நடக்கிறது

பார்வையாளர்களுக்கு அனுமதி இலவசம்

மதுரை, டி.19- மதுரையில் நடைபெறும் விவசாய கண்காட்சி இன்றும், நாளையும் நடக்கிறது. இதனை விவசாயிகள் ஆர்வத்துடன் பார்வையிட்டு வருகின்றனர்.

விவசாய கண்காட்சி

மதுரை அனுப்பானடி. வேலம்மாள் மருத்துவமனை அருகில் உள்ள 'ஐடா ஸ்கட்டர்' அரங்கில் 'யுனைடெட் அக்ரிடெக் 2021' என்ற தலைப்பில் மாபெரும் விவசாய கண்காட்சி நேற்று முன்தினம் தொடங்கியது. இதில், 110 அரங்குகள் இடம் பெற்றுள்ளன. அந்த அரங்கத்தில், விவசாயத்திற்கு தேவையான கருவிகள், நடவு முதல் அறுவடை வரை தேவையான எந்திரங்கள், களை எடுப்பு எந்திரங்கள், கதிர் அறுவடை செய்யும் எந்திரங்கள், கதிர் அடிக்கும் எந்திரங்கள், டிராக்டர்கள், சோலார், உயர்தர நவீன தொழில் நுட்பங்கள் கொண்ட பம்புகள், மோட்டார்கள் உள்ளிட்ட பல பொருட்கள் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

2-ம் நாள் விற்பனை

2-ம் நாளான நேற்று தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் ஏராளமான விவசாயிகள் கண்காட்சியை பார்வையிடுவதற்காக வந்திருந்தனர். இதுபோல், விவசாயிகளுக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திசெய்யும் வகையிலும், விவசாயிகளுக்கு அரசு வழங்கும் மானியங்கள் குறித்து விரிவான தகவல் கொடுக்கவேளாண்மை, அலுவலர்கள், வங்கி அலுவலர்கள் கண்காட்சியில் பணியில் இருக்கிறார்கள்.

விவசாயிகளுக்கு ஏற்படும் சந்தேகங்களை உடனடியாக நிவர்த்தி செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கண்காட்சியில் அமைத்துள்ள சிறு நிறுவனங்கள் விவசாயிகள் வாங்கும் பொருட்களுக்கு சிறப்பு தள்ளுபடியும் வழங்கி வருகின்றன.

இன்றும், நாளையும் நடக்கிறது

மதுரையில் நடைபெற்று வந்து இந்த விவசாய கண்காட்சி இன்றும், நாளையும் நடக்கிறது. இதனை காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை பார்வையிடலாம். அனுமதி இலவசம் என்பதால், நினமும் இந்த கண்காட்சியை 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரை விவசாயிகள் பார்வையிட்டு வருகின்றனர். கண்காட்சியை பார்வையிட்ட சிவர் கூறுகையில், "மதுரையில் நடைபெறும் இந்த விவசாய கண்காட்சி மிகவும் அவசியமானது. ஒவ்வொரு அரங்கிலும் உள்ள ஒவ்வொரு பொருட்களும் விவசாயத்திற்கு உபயோகப்படுத்தி, தங்கள் மகசூலை அதிகரிக்க உதவி செய்யும் வகையில் உள்ளது. இதனை விவசாயிகள் மட்டுமின்றி வருங்கால தலைமுறையினரும், கல்லூரி மாணவ, மாணவிகளும் பார்வையிட வேண்டும். அழிந்து வரும் விவசாயத்தை வருங்கால தலைமுறையினர் தான் செழிப்பாக்க வேண்டும். இங்கு, விவசாய எந்திர பொருட்கள் மட்டுமின்றி விவசாயத்திற்கு தேவையான உரங்கள், விதைகள், மரக்கன்றுகள், நவீன தொழில்நுட்பம் கொண்ட வணிக நிறுவனங்களுக்கு தேவையான எந்திரங்களும் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன" என்றனர்.

மதுரையில் நடைபெற்று வரும் விவசாய கண்காட்சியில் 2–ம் நாளாக நேற்று பார்வையிட்ட பொதுமக்கள்.

மதுரை வேலம்மாள் 'ஐடா ஸ்கட்டர்' அரங்கில்

விவசாய கண்காட்சி தொடக்கம்

20-ந்தேதி வரை நடக்கிறது

மதுரை, டி.சி.18– மதுரையில் வேலம்மாள் 'ஐடா ஸ்கட்டர்' அரங்கில் 'யுனைடெட் அக்ரிடெக் 2021' என்ற தலைப்பில் மாபெரும் விவசாய கண்காட்சி நேற்று தொடங்கியது. இந்த கண்காட்சியை வேலம்மாள் கல்வி குழும தலைவர் எம்.வீ.முத்துராமலிங்கம், தமிழக அனைத்து விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பு குழு மாநில தலைவர் பி.ஆர்.பாண்டியன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி வைத்து, ரிப்பன் வெட்டி தொடங்கி வைத்தனர்.

இதில் வேலம்மாள் மருத்துவ குழும இயக்குனர் கார்த்திக், தி.மு.க. அமைப்புசாரா தொழிலாளர் முன்னேற்ற சங்க மாவட்ட செயலாளர் வேல் முருகன், மதுரை வேளாண்மைத்துறை இணை இயக்குனர் விவேகானந்தன், விவசாயிகள் தர்மராஜ், தமிழக அனைத்து விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்புக்குழு செயலாளர் அருண், மதுரை மாவட்ட நஞ்சை புஞ்சை விவசாயிகள் சங்க தலைவர் மணிகண்டன், பெரியாறு வைகை பாசன ஆயக்கட்டு விவசாயிகள் சங்க கூட்டமைப்பு தலைவர் ராமன், பேரையூர் தாலுகா விவசாய சங்க தலைவர் முத்துமீரான் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கட்டணம் இல்லை

தினமும் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை கண் காட்சியை கட்டணமின்றி இலவசமாக பார்வையிடலாம். இதில், ஏராளமான அரங்குகள் இடம் பெற்றுள்ளன. அதில் விவசாய நடவு முதல் அறுவடை வரை தேவையான எந்திரங்கள், களை எடுப்பு எந்திரங்கள், கதிர் அறுவடை எந்திரங்கள், கதிர் அடிக்கும் எந்திரங்கள், சோலார், உயர்தர நவீன தொழில் நுட்பங்கள் கொண்ட பம்புகள், மோட்டார்கள், மின்சாதனபொருட்கள், விவசாயத்திற்கு தேவையான வேலிகள் அமைக்கும் எந்திரங்கள், பயிர்களை பாதுகாக்கும் மருந்துகள், உரவகைகள், விவசாயத்திற்கு தேவையான டிராக்டர் வகைகள், மின்சாரத்தில் இயங்கும் வாகனங்கள் உள்ளிட்ட பல பொருட்கள் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. மேலும் விவசாயிகளுக்கு அரசு வழங்கும் மானியங்கள் குறித்து தக வல் கொடுக்க வேளாண்மை அலுவலர்கள், வங்கிகளின் அரங்குகளும் இடம்பெற்றிருக்கின்றன. மேலும், இந்த கண் காட்சியில் அரங்கு அமைத்துள்ள சிறு நிறுவனங்கள், விவசாயிகள் வாங்கும் பொருட்களுக்கு சிறப்பு தள்ளுபடியும் உண்டு.

20-ந்தேதி வரை

இந்த கண்காட்சியை விவசாயிகள் தவறாமல் பார்வையிட்டு நவீன தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ள வேண்டும் என நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் யுனைடெட் டிரேடு பேர்ஸ் இந்தியா நிறுவனத்தின் இயக்குனர் பாக்கியராஜ் தெரிவித்துள்ளார்.

மதுரையில் நேற்று தொடங்கிய விவசாய கண்காட்சி, வருகிற 20–ந்தேதி வரை நடக்கிறது.

விவசாய கண்காட்சி இன்று நிறைவடைகிறது

அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பார்வையிட்டார்

மதுரை, ஆக.25- மதுரை வேலம்மாள் மருத்துவமனை வளாகத்தில் உள்ள ஐடா ஸ்கட்டர் அரங்கில் யுனைடெட் அக்ரிடெக்-2019 என்ற தலைப்பில் விவசாய கண்காட்சி நடத்து வருகிறது. கடந்த 22-ந்தேதி தொடங்கிய இக்கண்காட்சி இன்று டன் (ஞாயிற்றுக்கிழமை) நிறைவடைகிறது. இந்த கண்காட்சியை கோவையை தலைமை யிடமாக கொண்டு செயல்படும் யுனைடெட் டிரேடு பேர்ஸ் இந்தியா என்ற தனியார் நிறுவனம் நடத்தி வருகிறது. இதில் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, மராட்டியம் உள்பட 8 மாநிலங்களில் இருந்து விவசாயம் தொடர்பான பொருட்கள், எந்திரங்கள் மற்றும் கருவிகளை தயாரிக்கும் 200 நிறுவனங்கள் ஸ்டால்களை அமைத்துள்ளன. அதில் நீர் மேலாண்மை, நவீன விவசாயம், இயற்கை விவசாயம், மாடித்தோட்டம் ஆகியவற்றுக்கு பயன்படுத்தும் வகையிலான எந்திரங்கள், இயற்கை உரம் உள்ளிட்ட ஸ்டால்களும் இடம் பெற்றுள்ளன.

இந்நிறுவனத்தில் விவசாய கண்காட்சியை நேற்று அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பார்வையிட்டார். முன்னதாக நிறுவன இயக்குனர்கள் மனோற்குமார், பாக்யராஜ் ஆகியோர் மலர்கொத்து கொடுத்து அமைச்சரை வரவேற்றனர். இதில் சரவணன் எம்.எல்.ஏ., வேளாண்மை உதவி இயக்குனர் விவேகானந்தன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். நேற்று வரை இந்த கண்காட்சியை ஆயிரக்கணக்கான விவசாயிகளும் பொதுமக்களும் பார்வையிட்டுள்ளனர்.

நேற்று தொடங்கிய விவசாய கண்காட்சியில் அமைக்கப்பட்ட ஸ்டால்களை விவசாயிகள் பார்வையிட்ட காட்சி.

மதுரை வேலம்மாள் அரங்கில்

விவசாய கண்காட்சி தொடக்கம்

மதுரை,ஆக.23- மதுரை வேலம்மாள் மருத்துவமனை அரங்கில் விவசாய கண்காட்சி தொடங்கியுள்ளது.

விவசாய கண்காட்சி

மதுரை அனுப்பானடி. வேலம்மாள் மருத்துவமனை வளாகத்தில் உள்ள ஐடா ஸ்கட்டர் அரங்கில் யுனைடெட் அக்ரிடெக் 2019 என்ற தலைப்பில் விவசாய கண்காட்சி நேற்று தொடங்கியது. வேலம்மாள் கல்வி அறக்கட்டளை தலைவர் முத்துராமலிங்கம், சரவணன் எம்.எல்.ஏ. ஆகியோர் குத்துவிளக்கேற்றி கண்காட்சியை தொடங்கி வைத்தனர். இந்த கண்காட்சியை கோவையை தலைமையிடமாக கொண்டு செயல்படும் யுனைடெட் டிரேடு பேர்ஸ் இந்தியா என்ற தனியார் நிறுவனம் நடத்தி வருகிறது. இதில் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, மகாராஷ்டிரா உள்பட 8 மாநிலங்களில் இருந்து விவசாயம் தொடர்பான பொருட்கள் மற்றும் எந்திரங்கள் மற்றும் கருவிகளை தயாரிக்கும் 200 நிறுவனங்கள் ஸ்டால்களை அமைத்துள்ளன. அதில் நீர் மேலாண்மை, நவீன விவசாயம், இயற்கை விவசாயம், மாடித்தோட்டம் ஆகியவற்றுக்கு பயன்படுத்தும் வகையிலான எந்திரங்கள், இயற்கை உரம் உள்ளிட்ட ஸ்டால்களும் இடம் பெற்றுள்ளன.

அனுமதி இலவசம்

இந்த கண்காட்சியை பார்க்க வரும் விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு அனுமதி இலவசம். மேலும் வெயிலுரிலிருந்து வரும் விவசாயிகளின் நலன் கருதி மாட்டுத்தாவணி, ஆரப்பாளையம் மற்றும் பெரியார் பஸ் நிலையங்களில் இருந்து கண்காட்சி நடைபெறும் இடம் வரையில் இலவச பஸ்கள் இயக்கப்படுகின்றன. காலை 10 மணியில் இருந்து மாலை 6 மணி வரை கண்காட்சியை பார்வையிடலாம். இந்த கண்காட்சி வருகிற 25-ந்தேதி நிறைவு பெறுகிறது. இந்தியா ஏற்பாடுகளை நிறுவன இயக்குனர்கள் மனோற்குமார், பாக்யராஜ் மற்றும் ஜெயந்தி செய்குன்னர்.

மதுரை விவசாய கண்காட்சியில் ரூ.57 கோடிக்கு வணிகம்

சாதனை படைத்தது யுனைடெட் அக்ரி டெக் 2019

மதுரை, ஆக.26

மதுரை அனுப்பானடி வேலம்மாள் மருத்துவமனை அருகே உள்ள ஐடா ஸ்கட்டரில் கடந்த 22 ஆம் தேதி யுனைடெட் அக்ரி டெக் 2019 என்ற விவசாய கண்காட்சி தொடங்கியது. இந்த கண்காட்சியில் தமிழகம், ஆந்திரா, கேரளா மற்றும் மகாராஷ்டிரா உள்பட 8 மாநிலங்களை சேர்ந்த முன்னணி நிறுவனத்தினர் அரங்கு அமைத்திருந்தனர். இதில் விவசாயிகளுக்கு நடவு முதல் அறுவடை வரையில் பயன்படும் இயந்திரங்கள், ஆர்காலிக் விவசாயத்திற்கு தேவையான பொருட்கள், விதைகள், டிராக்டர், சொட்டு நீர் பாசன கருவிகள் மற்றும் விதைகள் உள்ளிட்ட பொருட்கள் விவசாயிகளின் பார்வைக்கு இடம் பெற்று இருந்தன.

இவ்வையிரிப்பு பெற்ற இந்த கண்காட்சியை தமிழக வருவாய்த்துறை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார், கட்டமாத்தூர் மாணவர் சரவணன், பேரையூர் ஆர்.டி.ஓ. ஆகியோர் மற்றும் ஏராளமான பொதுமக்கள் ஆர்.டி.ஓ. ஆகியோர் பார்வையிட்டனர். மதுரை மாவட்ட ஆட்சியர் வினய் கலந்து கொண்டு, கண்காட்சியை பார்வையிட்டார். 'கண்காட்சியில் 200 நிறுவனங்கள் ஸ்டால்கள் அமைத்துள்ளன. 8 மாநிலங்களிலிருந்து விவசாயிகள் வந்துள்ளனர். 25 ஆயிரம் பேர் கண்காட்சியை பார்வையிட்டுள்ளனர். 57 கோடிக்கு வணிகம் நடைபெற்றுள்ளது. 25 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். 2 கோடி ரூபாய் மதிப்பிலான ஆர்டர்கள் பெறப்பட்டுள்ளன.